இனிமையான குழந்தைகளே! நீங்கள் முழு மனித .குலத்திற்கும் நன்மை செய்பவர்கள் ஆவீர்கள், நீங்கள் அநேகருக்கு நன்மை செய்ய வேண்டும், அசரீரி ஆகும் பயிற்சியுடன் கூடவே சேவையும் அவசியம் செய்ய வேண்டும்.

கேள்வி: எந்த ஒரு விஷயத்தில் தந்தை கூட நாடகத்தின் விதி என்று கூறி மௌனமாகி விடுகிறார்?

பதில்: வெகு காலமாக தந்தையின் பாலனை பெற்று விட்டு பின் ஒரு சில குழந்தைகள் மாயைக்கு வசப்பட்டு விடுகிறார்கள். திருமணம் செய்து கொண்டு எங்கெங்கோ சென்று விடுகின்றார்கள். ஆச்சரியப்படும் வகையில் ஓடிப்போய் விடுகிறார்கள். பின் தந்தை நாடகத்தின் செயல் என்று கூறி மௌனமாகி விடுகிறார். இதுவும் யக்ஞத்தில் தடை ஏற்படுகிறது என்பதை தந்தை அறிவார். குழந்தைகள் எங்குமே அவர் ஒருவரது பெயர் ரூபத்திலும் மாட்டி விடக் கூடாதே என்ற கவலை தந்தைக்கு இருக்கும். மாயை நிறைய தடைகளை ஏற்படுத்துகிறது. எனவே குழந்தைகளே நீங்கள் மாயைக்கு பயப்படக்கூடாது. தந்தையின் நினைவு மூலமாக வெற்றி அடைய வேண்டும் என்று பாபா ஆலோசனை அளிக்கிறார்.

ஓம் சாந்தி! இனிமையிலும் இனிமையான குழந்தைகள் நாம் தந்தை மற்றும் தாதாவின் முன்னால் அமர்ந்துள்ளோம் என்பதை அறிந்துள்ளார்கள். ஒவ்வொரு விஷயமும் புதியது ஆகும் மற்றும் ஸ்ரீமத்படி ஒரே ஒரு தந்தையைத்தான் நினைவு செய்ய வேண்டும். தந்தை தாதாவின் சரீரம் மூலமாக ஸ்ரீமத் அளிக்கிறார். மன்மனா பவ அதாவது தந்தையை நினைவு செய்யுங்கள் என்பது அடிக்கடி குழந்தைகளுக்கு கவனம் கொடுக்கப்படுகிறது. இந்த தாதாவை நினைவு செய்யக் கூடாது. தாதாவின் ஆத்மா கூட தந்தையை நினைவு செய்கிறது. எனவே நீங்கள் கூட நினைவு செய்ய வேண்டும். ஆத்மாவாகிய நீங்கள் அசரீரி ஆவீர்கள். நானும் அசரீரி ஆவேன் உங்களுக்கு இந்த சரீரத்தின் மூலம் கற்பிக்கிறேன் அவ்வளவே! இவர் ஒன்றும் சர்வ சக்தி வான் அல்ல. சர்வ சக்திவான் ஒரு தந்தையே ஆவார். நீங்கள் உலகிற்கு எஜமானர் ஆகிறீர்கள் தான். ஆனால் உங்களை சர்வ சக்திவான் என்று கூறமாட்டார்கள். சர்வ சக்திவான் மூலமாக நீங்கள் இராவணன் மீது வெற்றி அடைந்து மீண்டும் உங்களது ராஜபதவியைப் பெறுகிறீர்கள். உங்களது தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள் என்பது தந்தையின் கட்டளை ஆகும். நீங்கள் (கல்ப) விருட்சத்தின் முதல், இடை, கடைப்பற்றி ரகசியத்தை அறிந்து விட்டுள்ளீர்கள். இப்பொழுது நீங்கள் எவ்வளவு அறிவாளி ஆகி உள்ளீர்கள் அதாவது புத்தியில் ஞானம் உள்ளது, இந்த ஞானம் மூலமாக உங்களுக்கு மிகவும் உயர்ந்த பதவி கிடைக்கிறது. நரனிலிருந்து நாராயணன் ஆகிறீர்கள். இது இராஜயோகத்தின் கல்வி ஆகும். முந்தைய கல்பத்தில் கூட நீங்கள் இந்த படிப்பை படித்தீர்கள் லட்சியம் எதிரிலேயே உள்ளது. பின் யார் எவ்வளவு புருஷார்த்தம் செய்கிறார்களோ புருஷார்த்தம் நிறைய செய்ய வேண்டும் மற்றும் மிகவும் சுலபமானது கூட தனது வீட்டை அறிந்து கொள்வது இது ஒன்றும் கஷ்டம் கிடையாது. நாம் ஆத்மா அசரீரி ஆவோம். சாந்தி தாமத்தில் இருக்கிறோம். அங்கு மனதின் சாந்தி ஆகியவை கூற மாட்டார்கள். உண்மையில் மன அமைதி என்ற வார்த்தை கூறுவதும் தவறாகும். மனமோ குதிரை ஆகும். ஆத்மாவுடன்

சரீரம் இருக்கும் வரை மனம் சாந்தமாக முடியாது. கர்மத்தை செய்யத்தான் வேண்டும். குறுகிய நேர அமைதியோ இரவில் உறக்கத்தில் கிடைக்கிறது. ஆத்ம கர்ம இந்திரியங்கள் மூலமாக செயல்களைச் செய்து செய்து களைத்துவிடும் பொழுது அசரீரி ஆகி விடுகிறது. எனக்கு உறக்கம் வருகிறது நான் களைத்து விட்டுள்ளேன் என்று ஆத்மா கூறுகிறது. எனவே ஆத்மா அசரீரி ஆகி விடுகிறது. இப்பொழுது தந்தையை நினைவு செய்ய வேண்டும் அப்பொழுது விகர்மங்கள் வினாசம் ஆகும். உறங்கிவிடு வதால் விகர்மம் ஒன்றும் வினாசமாகாது. இதுவோ தந்தையை நினைவு செய்வதற்கான புருஷார்த்தம் செய்ய வேண்டும். அந்த புருஷார்த்தம் மிகவும் அவசியமானது. என்னை நினைவு செய்யுங்கள் என்று அடிக்கடி தந்தை கூறுகிறார்: யார் எவ்வளவு சேவை செய்வார்களோ அவ்வளவு தங்களுடைய பிரஜைகளை தயார் செய்வர். ஏராளத்திலும் ஏராளமான பிராமணர்களை உருவாக்க வேண்டும். அநேகருக்கு நன்மை செய்பவர் ஆக வேண்டும். நீங்கள் முழு மனித குலத்திற்கும் நன்மை செய்பவர்கள் ஆவீர்கள். இராவண ராஜ்யத்தில் யாரும் யாருக்கும் நன்மை செய்வதில்லை. மனிதர்கள் தான் புண்ணியம் செய்யும் பொழுது நாங்கள் நல்ல கர்மம் செய் கிறோம் என்று நினைக்கிறார்கள். எப்படி இந்த போர் மூலமாக சொர்க்க வாசல் திறக்கிறது என்று நீங்கள் கூறுகிறீர்கள். இது மிகவும் நல்ல யுத்தம் ஆகும். பிராமணர்களாகிய நீங்கள் இப்பொழுது ஞானத் துடன் கூடிய ஆத்மாவாகி உள்ளீர்கள். யாருக்குள் 5 விகாரம் பிரவேசம் ஆகி உள்ளதோ அவர்கள் தேவதை எப்படி ஆக முடியும் நரனிலிருந்து நாராயணன் ஆவதற்கு நல்ல உழைப்பு (முயற்சி) வேண்டும். எல்லையில்லாத புருஷார்த்தம் செய்ய வேண்டும். இப்பேர்பட்ட உயர்ந்த பதவியை தந்தையைத் தவிர வேறு யாரும் அடையச் செய்ய முடியாது. யாருமே இராஜயோகம் கற்பிக்க முடியாது. நீங்கள் லட்சுமி நாராயணனின் வாழ்க்கை சரித்திரத்தையும் அறிந்துள்ளீர்கள். அவர்கள் இந்த ஆட்சியை எப்படி அடைந்தார்கள்? எங்கிருந்து அடைந்தார்கள்? யார் மீது வெற்றி அடைந்தார்கள் ? இப்பொழுது இராஜயோகம் கற்றுக் கொண்டு நாங்கள் லட்சுமி நாராயணரைப் போல ஆகிக் கொண்டிருக்கிறோம் என்று நீங்கள் அனைவருக்கும் புரிய வைக்கின்றீர்கள். சுயம் பகவான் நரனிலிருந்து நாராயணன் ஆவதற்கான படிப்பை கற்பிக்கிறார். எனவே குழந்தைகளாகிய உங்களுக்கு மிகுந்த போதை இருக்க வேண்டும். இந்த பிராம்மண தர்மத்தை பரம்பிதா பரமாத்மா தான் ஸ்தாபனை செய்கிறார் என்று தந்தை புரிய வைக்கின்றார். இப்பொழுது பிராமண தர்மம் எங்கு இருக்கும்? சத்யுகத்திலா? இல்லை. அவசியம் இங்கு தான் ! தந்தை பிராமண தர்மத்தை ஸ்தாபனை செய்தார் மற்றும் பிரம்மா முகவம்சாவளியைப் படைத்தார். அவரே கூறுகிறார், நான் அநேக ஜென்மங்களின் கடைசியினுடைய சாதாரண மனித சரீரத்தில் பிரவேசம் செய்கிறேன். அவருக்கோ தனது பிறவிகள் பற்றிக் கூட தெரியாது. பிரம்மாவை ஏன் இங்கு வைத்திருக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். அடே பிரஜா பிரதாவோ இங்கு இருக்க வேண்டும். சூட்சுமவதன வாசி தேவதை இங்கு எவ்வாறு இருக்க முடியும் என்று நினைக்கிறார்கள். பிரஜாபிதா பிரம்மாவின் 84 பிறவிகளின் ரகசியத்தை தந்தை வந்து புரிய வைக்கின்றார். இது கடைசி பிறவி ஆகும். இதில் தான் வரவேண்டி உள்ளது. யார் ஆதியில் இருக்கிறாரோ அவர் முடிவிலும் இருப்பார். இந்த எல்லா ரகசியங்களையும் தந்தை தான் புரிய வைக் கின்றார். இந்த படம் கூட சிவபாபா திவ்ய திருஷ்டி மூலமாக செய்ய வைத்துள்ளார். பரமபிதா பரமாத்மா கற்பித்தார் என்று கீதையில் எழுதப்பட்டுள்ளதா என்ன? பாருங்கள். புரிய வைப்பதில் எவ்வளவு உழைப்பு

தேவைப்படுகிறது. நாளுக்கு நாள் விளக்கங்கள் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. முந்தைய கல்பத்தில் எந்த நேரத்தில் புரிய வைத்தாரோ அதே நேரத்தில் இப்பொழுதும் புரிய வைக்கிறார். ஆத்மாவாகிய எனக்குள் என்ன பாகம் பொருந்தி உள்ளதோ அதுவே திரும்பவும் நடக்கிறது. இது பதீத உலகம் ஆகும் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். அனைவருக்கும் கடைசி பிறவி ஆகும். இப்பொழுது நாடகம் முடிவடைகிறது. இல்லா விட்டால் சத்யுகத்திலிருந்து தெய்வீக தர்மம் எப்படி ஸ்தாபனை ஆகும். சத்யுகத்தில் இருப்பது ஒரு அத்வைத (ஒரே ஒரு) தேவி தேவதா தர்மம் ஆகும். இச்சமயம் உங்களுடையது பிராமண தர்மம் ஆகும். விராட ரூபத்தின் ரகசியம் கூட புரிய வைத்திருக் கின்றார். பிராமணன் என்றால் உச்சி குடுமி. பிறகு பிராமணன் தான் தேவதை ஆகிறார்கள். சிவபாபா பிராமண தர்மத்தை படைக்கிறார் என்பது மனிதர்களுக்குத் தெரியவே தெரியாது. இப்பொழுது நீங்கள் டிரான்ஸ்பர் ஆகிறீர்கள். சூத்திரர்களிலிருந்து, பிராமணன், கீழிலிருந்து ஆகாயத்திற்குச் சென்று விடுகிறீர்கள். ஆத்மாக்கள் இப்பொழுது வீடு செல்ல வேண்டும் மனிதர் கள் தேவிகளின் கோவிலுக்குச் செல்கிறார்கள், ஆனால் அந்த ஜெகதம்பா யார் என்பது அவர் களுக்குத் தெரியாது. அவரும் பிராமணி ஆவார். நீங்களும் பிராமணிகள் ஆவீர்கள், ஜகதம்பா மற்றும் ஜகத்பிதாவும் இருக் கிறார்கள். யார் யாருடைய பூசாரியாக இருப்பாரோ அவருடைய கோவிலைக் கட்டுவார். ஜகதம்பா யார் என்ற ஞானம் சிறிதளவும் இல்லை. அவர் ஞான ஞானேஸ்வரி ஆவார் பின் இராஜ ராஜேஸ்வரியாகிறார். தேவிகளுக்கு நிறைய பூஜை ஆகிறது. சத்யுகத்தில் இருப்பவர்கள் லட்சுமி நாராயணன் திரேதாவில் இராமர் சீதை மற்றது எல்லாமே இச்சமயத்தினுடைய படங்கள் ஆகும். அநேக படங்கள் உள்ளன. அநேக கோவில்கள் கட்டி உள்ளனர். பிரம்மா-சரஸ்வதி, பிராமணன் மற்றும் பிராமணிகள் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். லட்சுமியை பிராமணி என்று கூறமாட்டார்கள். அவர் தேவதை ஆவார். பிராமணியாக இருக்கும்பொழுது 21 பிறவிகளுக்கான எல்லா மனோ விருப்பங்களையும் பூர்த்தி செய்கிறார். லட்சுமி ஆகும்பொழுது கிரேட் குறைந்து விடுகிறது. இப்பொழுது நீங்கள் இறைவனின் குழந்தைகள் ஆவீர்கள். உங்களுடைய கிரேட் உயர்ந்ததாகும். இந்த விஷயங்களை எந்த மனிதர்களும் புரிந்து கொள்ள முடியாது. நீங்கள் பிராமண குல பூஷணர்கள் ஆவீர்கள். இப்பொழுது நீங்கள் இறைவனுடையவர் ஆகி உள்ளீர்கள். பிறகு தேவதா குலத்தில் செல்வீர்கள். இந்த சங்கமயுகம் கல்யாணகாரி ஆகும். தந்தை பாரதத்தை சொர்க்கமாக இருந்தது. ஆனால் யாருடைய புத்தியிலும் பதிவதில்லை. பாரவாசிகளுக்குத் தெரிய வந்தால் நாங்கள் சொர்க்கத்தின் எஜமானராக இருந்தோம் என்று குஷி அடைந்து விடுவார்கள். யாராவது இறந்தால் சொர்க்கம் சென்றார் என்று கூறுகிறார்கள். ஹெவென்லி காட் பாதர் தான் ஹெவெனை அமைக்கிறார் மூல வதனமோ இருக்கவே இருக்கிறது. அதற்கு ஸ்தாபனை என்ற வார்த்தை வராது. ஸ்தாபனை தர்மத் தினுடையது ஆகிறது. அது ஆத்மாக்களின் இல்லம் ஆகும். இச்சமயம் அது காலி ஆகிறது. பிறகு நம்பர் பிரகாரம் எல்லாரும் செல்வார்கள். இதை குழந்தைகளின் புத்தியில் பதிவு செய்ய வேண்டும், மற்றவர்களுக்கு புரியவைப் பதற்காக. தர்ம (மதம்) ஸ்தாபனையின் பொருட்டு எந்த ஆத்மாக்கள் எல்லாம் வருகிறார்களோ அவர்கள் பின் சதோ, ரஜோ, தமோவில் வருகிறார்கள். நீங்கள் இப்பொழுது மேலே செல்ல வேண்டும். உங்களுடையது ஏறும் கலை ஆகும். நீங்கள் ஆன்மீக பிராமணர்கள் முகவம்சாவளி ஆவீர்கள். அவர்கள் குக வம்சாவளி ஸ்துôல

பிராமணர்கள் ஆவார்கள். அவர்கள் ஸ்துல யாத்திரை செய்விக்கிறார்கள். கதை கூறுகிறார்கள். பிராமணர் களாகிய நீங்கள் சிருஷ்டியின் முதல், இடை, கடை பற்றிய ரகசியத்தை விளக்குபவர்கள் ஆவீர்கள். ஸ்துல பிராமணர்கள் கூட இங்கு வருகிறார்கள், உண்மையான பிராமணர்கள் உண்மையில் இவர்கள் தான் என்று அவர்களுக்குத் தெரிய வரும்பொழுது நாம் உண்மையில் பொய்யான கதைகளைக் கூறுகிறோம் என்று அறிந்து கொள்கிறார்கள். அவர்கள் கக்கத்தில் (கை இடையில்) சாஸ்திரம் உள்ளது. உங்களது புத்தியில் ஞானம் உள்ளது. அவர்கள் சாஸ்திரம் படித்து கூறுகிறார் கள் மற்றும் எப்படி பாபாவின் புத்தியில் உள்ளதோ அது போல உங்கள் புத்தியில் ஞானம் உள்ளது பாபா சத் சித் ஆனந்த சொரூபமானவர், விதை ரூபம் உடையவர் மற்றும் நிராகார் ஆவார். நீங்களும் புத்தியில் ஞானத்தை தாரணை செய்ய வேண்டும். ஞானம் கடினமானது அல்ல. கவனம் கொடுக்க வேண்டும் அவ்வளவே வீடு வாசலை விட வேண்டும் என்பதும் அல்ல. இதுவோ காரணம் அமைந்து விடுகிறது. உதாரணமாக ஒரு சிறுமி திருமணம் செய்து கொள்ள விரும்புவதில்லை தந்தை அடிக்கிறார். ஆனால் அவரோ சிறியவர் எனவே ஓடி விட முடியாது. மேஜர் ஆனார் என்றால் வந்து அடைக்கலம் பெறுகிறார். உன்னை சரணடைந்தேன் என்று பாடுகிறார்கள். ஏனெனில் இராவண ராஜ்யத்தில் மிகுந்த துக்கத்தில் இருக்கிறார்கள். பிறகு தந்தையிடமிருந்து ஆஸ்தி பெறுகிறார்கள். உதாரணமாக ஒருவரை கணவன் மிகவும் அடிக்கிறார் இதை விட, பாபாவிடம் போய் சரணடையலாம் என்று நினைக்கிறார். ஆனால் வீடுவாசலை விடுவது அவ்வளவு சுலபமல்ல முயற்சி தேவைப்படுகிறது. சந்நியாசி சந்நியாசம் செய்கிறார்கள் தான். ஆனால் நண்பர்கள் உறவினர்கள் ஒன்றும் மறந்து விடுவதில்லை. ஒரு சிலர் திரும்பியும் வந்து விடுகிறார்கள். உழைப்பு இருக்கிறது. பிரம்ம தத்துவத்துடன் சீக்கிரம் யோகம் ஏற்படுவ தில்லை. இங்கு பழைய உலகம் மற்றும் பழைய சம்பந்தம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். தேகத்துடன் சேர்த்து எல்லாவற்றையும் விட வேண்டி உள்ளது. எனவே உங்களுக்கு இந்த பழைய உலகத்தின் மீது வைராக்கியம் வருகிறது. பழைய சரீரத்தின் மீதும் உங்களுக்கு வைராக்கியம் உள்ளது. இது எல்லையில்லாத வைராக்கியம் ஆகும் அவர்களுடையது எல்லைக்குட்பட்ட ரஜோகுணி வைராக்கியம் ஆகும். இது எல்லையில்லாத சதோ பிரதான வைராக்கியம் ஆகும். உலகத்தை விடுவதில்லை, நீங்கள் பழைய உலகத்திலிருந்து புது உலகம் செல்வதற்காக புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறீர்கள். புது உலகத்திற்குச் சென்று சுகம் அனுபவிக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்களா என்ன? இந்த சுகம் உங்களுக்காக உள்ளது. அவர்களுடையது இரஜோபிரதான சந்நியாசம் ஆகும். உங்களுடையது சதோபிரதான சந்நியாசம் ஆகும். குழந்தைகள் சதோபிரதானம் ஆக வேண்டும். யோகத்தினால் தான் துரு சாம்பலாகும். எனவே இது யோக அக்னி என்று கூறப்படுகிறது. நினைவு அக்னி என்ற வார்த்தை அழகாக இல்லை. யோக அக்னி என்று கூறப்படுகிறது. அதன் மூலம் விகர்மங்கள் சாம்பலாகும். இருப்பதோ மிகவும் சுலபமான விஷயம். ஆனால் பாபா நாங்கள் மறந்து விடு கின்றோம் என்று அடிக்கடி கூறுகிறார்கள். குழந்தைகளே! ஆத்ம அபிமானி ஆகுங்கள் என்று தந்தை கூறுகின்றார். சத்யுகத்திலிருந்து திரேதா வரை நீங்கள் ஆத்ம அபிமானியாக இருக்கிறீர்கள். நீங்கள் அரை கல்பம் ஆத்ம உணர்வில் அரை கல்பம் தேக உணர்வில் இருக் கிறீர்கள். எனவே இப்பொழுது ஆத்ம உணர்வில் இருப்பதற்கு உழைப்பு தேவைப்படுகிறது. சத்யுகத்தில் நாம் ஒரு சரீரத்தை விட்டு மற்றொன்றை எடுக்கிறோம் என்று உணர்ந்திருப்பார்கள். பாம்பின்

உதாரணம் லி இந்த உதாரணம் உங்களுக்காக உள்ளது. சந்நியாசிகள் ஜோதி ஜோதியில் கலந்து விட வேண்டும் என்று விரும்பு கிறார்கள். நாம் மீண்டும் ஒரு புது சட்டை (உடல்) பெற வேண்டியுள்ளது என்பது அவர்களுக்குத் தெரியாது. நீங்கள் இந்த வயோதிக சரீரத்தை விட்டுவிட்டு சென்று புதியதை எடுப்போம் என்பதை அறிந்துள்ளீர்கள். பழைய துணியை விடவேண்டும் என்று மனம் விரும்புகிறது. ஆமையின் உதாரணம் கூட உங்களுக்காகத்தான் உள்ளது. கர்மம் செய்கையிலும் தந்தையை நினைவு செய்து கொண்டே இருங்கள். தந்தை தான் சத்கதி தாதா (வள்ளல்) ஆவார். சத்கதி தாதா ஒரு சிவபாபாவைத் தவிர வேறு யாருமில்லை. ஆத்மாக்களாகிய நீங்கள் அனைவரும் சிவபாபாவின் குழந்தைகள் பின் பிரஜாபிதா பிரம்மாவிற்கும் குழந்தைகள் ஆவீர்கள். முதலில் இருப்பது பிராமணர்கள். பிறகு விருட்சம் வளர்ச்சி அடைகிறது. இது பல தர்மங்களின் (மதங்களின்) விருட்சம் ஆகும். முதலில் தேவி தேவதா தர்மம் பின் இஸ்லாம், பௌத்தம் பின் விருத்தி ஆகிக் கொண்டேயிருக்கிறது. கிளைகள், சிறு கிளைகள் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. புதியதாக வெளிப்படும் பொழுது அவற்றிற்கு மகிமை நிலவுகிறது. பின்னால் சக்தி குறைந்து கொண்டே போகிறது. நீங்கள் மிகவும் பெரிய சக்தி உடையவர்கள் உலகிற்கு எஜûமானர் ஆகிறீர்கள். அங்கு மந்திரி யாரும் இருக்க மாட்டார்கள். இராஜாவின் கட்டளைப்படி நடக்கும். துவாபரத்திலிருந்து மந்திரிகள் இருப்பார்கள். இப்பொழுதோ இராஜாலிராணி இல்லவேயில்லை. இதுவும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள நாடகம் ஆகும். பாரதம் சொர்க்கமாக இருந்தது. இப்பொழுது நரகமாக உள்ளது. நரகம் கூட முதலில் சதோபிரதானம் பின் இப்பொழுது நரகம் கூட தமோபிரதானம் ஆகும். அது பயங்கரமான நரகம் என்று கூறப்படுகிறது. தந்தை கூறுகிறார் லி நான் எவ்வளவு முயற்சி செய்ய வேண்டியுள்ளது. எவ்வளவு கவலை (அக்கறை) ஏற்படுகிறது. எங்காவது எந்த ஒரு சகோதரியும் குண்டர்களின் பிடியில் அகப்பட்டுவிடக் கூடாது என்று. உலகம் மிகவும் அசுத்தமாக உள்ளது. சென்டரில் மோசமான மனிதர்களும் வருகிறார்கள். பெயர் ரூபத்தில் மாட்டிக்கொள்கிறார்கள். யக்ஞத்தில் அநேகவிதமான தடைகளும் ஏற்படுகின்றன. மாயையும் தடை ஏற்படுத்துகிறது. பின் நிறைய பேர் மூச்சுத் திணறி விடுகிறார்கள். பிறகும் தந்தையை நினைவு செய்ய வேண்டியுள்ளது. போர்க்களத்தில் நின்று சண்டையிட வேண்டும். பயப்படக்கூடாது. நிறைய பேர் கைவிட்டுப் போய் விடுகிறார்கள். எத்தனை வருடங்கள் இருந்து பாலனை எடுத்தார்கள். பிறகு திருமணம் செய்து கொண்டு எங்கெங்கோ போய் விட்டார்கள். அச்சரியப்படுகின்றனர்.... பிறகு ஓடியும் விடுகிறார்கள். பிறகும் டிராமாவின் விதி என்று கூறி மௌனமாக ஆகிவிடுகிறார். சேவையில் இருப்பவர்களுக்கு மிகவும் அதிகமான (உள்ளம் நிறைந்த) குஷி இருக்கும். நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) தந்தையை சரணடையவதற்கு புத்தி மூலம் எல்லையில்லாத சந்நியாசம் செய்ய வேண்டும்.பழைய உலகம் மற்றும் தேகத்தை மறந்து ஆத்ம

அபிமானியாக இருக்கும் உழைப்பு (முயற்சி)செய்ய வேண்டும்.

(2) நாமாகிய பிராமணர்கள் அனைவரின் மனோ விருப்பங்களைப் பூர்த்தி செய்யக்கூடியவர்கள் என்ற போதையில் இருக்க வேண்டும்.

வரதானம் : தனது சிரேஷ்ட திருஷ்டி, உள்ளுணர்வு, செயல் மூலம் சேவை செய்யக்கூடிய நிரந்தர சேவாதாரி ஆகுக.

எப்படி இந்த சரீரம், சுவாசம் இல்லாமல் இருக்க முடியாதோ, அது போல் பிராமண வாழ்க்கையின் சுவாசமே சேவை தான். எப்படி சுவாசம் நடைபெறவில்லை என்றால் மூர்ச்சையாகி விடு கின்றனரோ, அது போல் பிராமண ஆத்மா சேவையில் பிஸியாக இல்லை என்றால் மூர்ச்சையாகி விடுவார்கள். எனவே ஒவ்வொரு நேரமும் தனது சிரேஷ்ட திருஷ்டி மூலம், விருத்தி மூலம், செயல் மூலம் சேவை செய்து கொண்டே இருங்கள். வாய்மொழி மூலம் சேவை செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை என்றால் மனசா சேவை செய்யுங்கள். அனைத்து விதமான சேவைகளும் செய்யும் போது தான் முழு மதிப்பெண்கள் பெற முடியும்.

சுலோகன்: சாட்சி நிலையின் ஸ்திதியினுடைய ஆசனம் தான் யதார்த்த நிர்ணயத்தின் ஆசனமாகும்.